தோலகட்டி நெல்லி
ரசம்
மக்கள் மனதில் கடந்த
60 வருட காலமாக
நிலைத்த பெயர்
ஏகப் பிரதிநிதிகளும்
விநியோகத்தரும்
ஜோ. எகட்டன்
செனித் மார்கட்டிங்
யாழ்நகர்

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை
விலை ரூ-1/=

செனித்
உங்கள் வியாபாரப் பொருட்களை துரிதமாக விற்பனை செய்வதற்கும் கவர்ச்சிகரமான விளம்பரங்கள் மூலம் மக்கள் மனதில் நிலை பெறச் செய்வதற்கும்
நாடுங்கள்.
ஜோ. எகட்டன்
செனித் மார்கட்டிங்
யாழ்நகர்

சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ௵ கார்த்திகை மீ 19உ புதன்கிழமை ஹிஜ்ரி 1406 ற.அவ்வல் பிறை 21 (04-12-1985) UTHAYAN — A LIVELY TAMIL DAILY கதிர்:- 8

★ குடாநாட்டில் மீண்டும் தேடுதல் ஆரம்பம்

இராணுவம் நேற்று பளையை குடைந்தது

முகமூடி நபருடன் வீடுவீடாகச் சென்று சோதனை; மக்கள் பதற்றம்

— அலுவலகச் செய்தியாளர்: வனிராஜ் —

யாழ்ப்பாணம், டிச. 4

நீண்ட நாட்களின் பின்னர் இராணுவத்தினர் யாழ்ப்பாணக் குடாநாட்டில் தேடுதல் வேட்டையை ஆரம்பித்தனர். நேற்றுக் காலையில் அவர்கள் பளைப் பகுதியைக் குடைந்தனர். முகமூடிஅணிந்த ஒரு நபரையும் அழைத்துச் சென்று வீடு வீடாகச் சோதனை நடத்தினர்.

இராணுவத்தினர் செவ்வாய்க்கிழமை காலை திடீரென பளைக்குச் சென்று தேடுதல் வேலையில் இறங்கினர்.

இதுபற்றிக் கூறப்படுவதாவது:-

சிவில் உடையில் வந்த இராணுவத்தினர் ஆயுதங்களுடன் பளைச் சந்தியில் இறங்கினர். அங்கு நின்று சரமாரியாக வேட்டுக்களைத் தீர்த்த பின்னர் வீதியால் வந்த வாகனங்களை மறித்தனர். போக்குவரத்தைப் பூரணமாகத் தடை செய்த பின்னரே அவர்கள் வீடு வீடாகத் தேடுதல் நடத்தத் தொடங்கினர். முகமூடி அணிந்த ஒரு நபரையும் படையினர் அழைத்துவந்திருந்தனர்.

பளை மகாவித்தியாலயத்தில் பலர் தஞ்சமடைந்தனர்.

ஆயுதப்படையினர் சுட்டுக்கொண்டே சென்றனர்.

பளை மகாவித்தியாலயத்தில் இருந்த மாணவிகள் அங்கும் இங்கும் ஓடத்தொடங்கினர்.

இதன்பின்னர் 56 பேரை ஒருபிரிவாகவும்— தலையில் இரத்தம் வழிந்த நிலையிலும், கைகள் கட்டப்பட்ட நிலையிலும் 8 இளைஞர்கள் இன்னொரு பிரிவாகவும் ஆயுதப் படையினரால் முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

தேடுதல்வேட்டையின் போதுஒரு இளைஞன் கொலையுண்டான். சிவம் மாஸ்டர் என்று அழைக்கப்படும் இந்த இளைஞனின் பெயர் சதாசிவம்.

காயமடைந்த 5 பேரில் மூவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

கருணாநிதி வளர்மதி (22)—பளை, எம். நாகராசா (48) — மானிப்பாய், எஸ், ரகு (15)— நாவற்குழி ஆகிய மூவருமே யாழ். ஆஸ்பத்திரி ஏழாம் வார்ட்டில் அனுமதிக்கப்பட்டவர்கள் ஆவர்.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து பளைப் பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது. கடைகளை மூட வர்த்தகர்கள் முற்பட்டனர். ஆனால் ஆயுதப் படையினர் மூட விடவில்லை.

பளை ரயில் நிலையமும் சேதமடைந்தது. பல வீடுகளின் சுவர்கள் மீது துப்பாக்கிக் குண்டுகள் பாய்ந்த அடையாளங்கள் காணப்பட்டன.

பளை மகாவித்தியாலயம் மற்றும் பாடசாலைகளும் இழுத்து மூடப்பட்டன.

முச்சந்தி முரளி



வயது போகப்போக அறளை பேர்ந்துபோறது எண்டு சொல்லுறது உண்மைதான் போலை. நாளுக்கு ஒரு பேச்சும் வேளைக்கு ஒரு வேஷமும் போட்டால எப்படி நாடு முன்னேறும், பிரச்சினையள் தீரும்?

நாவற்குழி இராணுவ முகாம் பகுதி துப்புரவு செய்யப்படுகிறது

"புதையல்" ஒன்றும் கிடைத்தது!

யாழ்ப்பாணம், டிச. 4

நாவற்குழி இராணுவ முகாமுக்கு அருகில் உள்ள பகுதிகள் நேற்று ஆயுதப் படையினரால் துப்புரவு செய்யப்பட்டது.

பெரிய மரங்கள் கூட வெட்டி வீழ்த்தப்பட்டன.

பற்றைகள், புதர்கள் எல்லாம் அகற்றப்பட்டன. அச்சமயம் அவ்வீதி வழியால் சென்ற வாகனங்கள் அனைத்தும் சோதனையிடப்பட்டன.

பற்றைக்குள் பதுக்கி வைக்கப்பட்டிருந்த ''புதையல்'' ஒன்றும் படையினரின் கையில் சிக்கியது. புதையல் வேறு ஒன்றும் அல்ல. உடைத்துப் பாவிக்கப்படாத இரண்டு போத்தல் சாராயம் தான் அந்தப் புதையல்.

அடையாளம் காணப்படவில்லை

ஏழு தமிழர் சடலங்கள் எரிப்பு

திருகோணமலை டிச, 4

கடந்த சனிக்கிழமை இரவு தேடுதல் வேட்டையின்போது தம்பலகாமம் கிராமத்தில் மரணமான 7 தமிழர்களின் சடலங்கள் அடையாளம் காணப்படாத நிலையில் எரிக்கப்பட்டன.

தம்பலகாமம் கோணேஸ்வரர் ஆலயத்திற்கு அருகில் வைத்து இவர்கள் கொலையுண்டனர்.

அந்த இடத்திலேயே பிரேதங்கள் கிடந்தன.

மரணவிசாரணையும் நடைபெறவில்லை,

அடையாளமும் காணப்படவில்லை,

இறந்தவர்களில் ஒருவரான மயில்வாகனம் (வயது 35), ஐந்து குழந்தைகளின் தந்தை. இவரின் மனைவி திருகோணமலை பிரஜைகள் குழுவினரைச் சந்தித்து, கொல்லப்பட்ட ஏழு பேரில் ஒருவர் தனது கணவர் என்று அறிய வந்திருப்பதாகக் கூறியிருக்கின்றார்,

''எனது கணவர் தீவிரவாதியல்ல' கணவன் இறந்ததால் நானும் 5 குழந்தைகளும் நிர்க்கதியாகி உள்ளோம்'' என்று கூறினார்.

சுட்டுக் கொல்லப்பட்ட இடத்திற்கு அருகில் விறகு காலை ஒன்று இருக்கின்றது. அந்த விறகு காலைக்குள் இறந்தவர்களின் உடல்களைப் போட்டு பின்னர் அவை எரிக்கப் பட்டன என்று தெரியவந்து உள்ளது,

நாடுயாவருக்கும் சொந்தம்: அதனை எல்லோரும் ஏற்கச் செய்தாலே தீர்வு

இ. தொ. கா. தேசிய சபை தீர்மானம்!

கொழும்பு, டிச.4

இந்த நாடு எல்லா சமூகங்களுக்கும் உரியது என்பதை சகலரும் உணர்ந்து கொண்டால் மாத்திரமே இனப்பிரச்சினைக்கு ஆக்கபூர்வமான வழிகாணும் சூழ்நிலை உருவாகும்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தேசிய சபைக் கூட்டத்தின் பின்னர் விடுக்கப்பட்ட அறிக்கையில் இப்படி தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இக் கூட்டம் நேற்றுக் கொழும்பில் நடைபெற்றது. அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடன் இனப் பிரச்சினையை தீர்த்து வைக்கத் தவறிவிட்டது.

அதனால் ஆயுதம் தாங்கி வன் செயலில் ஈடுபடுகின்றதீவிர வாதப் பிரிவுகள் தோன்றின.

இதன் பின்னர் தமிழர் அதிகமாக வாழும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பயங்கரவாதி என்று அழைக்கப்படுகின்ற ஆயுதம் தாங்கிய தமிழ்த்தீவிரவாதிகள் பாதுகாப்புப் படையினரைத் தாக்கி கொல்லும் நிலை உருவாகியது.

பதிலுக்கு பாதுகாப்புப் படையினர் அங்குள்ள அப்பாவி மக்களை தாக்கினர். பாதுகாப்புப் படையினரின் அதிகார வரம்பு மீறிய வன்செயலுக்கு அம்மக்கள் ஆளானார்கள்.

இனப்பிரச்சினையை தீவிர வாதிகள் வன்செயலினாலோ அல்லது பாதுகாப்புப் படையினரின் வன்செயலினாலோ தீர்க்க முடியாது.

இந்த நாடு எல்லா சமூகங்களுக்கும் உரியது என்பதை சகலரும் உணர்ந்து செயற்பட்டால் மட்டுமே ஆக்க பூர்வமான வழிவகை எதனையும் காண முடியும்.

அதற்கு வழி செய்யும் விதத்தில் 1986 ஆம் ஆண்டை சமாதானம், நட்புறவு, தேசிய சமரசம் ஆகியவற்றிற்கான ஆண்டாக இ. தொ. கா. தேசிய குழு பிரகடனப் படுத்துகிறது. அந்த ஆண்டில் பிரஜாவுரிமைப் பிரச்சினையும் தீர வேண்டும்.

இதனை வலியுறுத்தும் வகையில் தியானம், வழிபாடுஆகியவற்றிலும் ஈடுபடுவது அவசியம். இதனை கவனத்தில் கொண்டு 1986 ஜனவரி 14தைப்பொங்கல் முதல் ஏப்ரல் புதுவருடம்வரையான காலத்தில் தோட்டத் தொழிலாளர் தினமும் காலையில் தியானம் பூசையில் ஈடுபட வேண்டும் எனக்கோருவது எனவும்முடிவானது.

குறைந்த பெறுமதி முத்திரைகள்

பருத்தித்துறை, டிச. 4

யாழ். நகரில் சாதாரண தபாலுக்கான 75 சத முத்திரை இல்லாததால் அதற்கு சமமான குறைந்த பெறுமதியான முத்திரைகள் தற்போது விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

சுபநேரம்

புதன்கிழமை
4 - 12 - 1985
சுபநேரம்:
4.46முதல் 6.16வரை
ராகுகாலம்:
12.16 முதல் 1.46 வரை
ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்
குருபூசை

மட்டக்களப்பில் 15 இளைஞர் விடுதலை

மட்டக்களப்பு டிச4

மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இளைஞர்களில் 15 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்புஇணைப்பு அதிகாரி திரு. மக்சி பெரேரா இதனைத் தெரிவித்தார்.

விடுதலையானவர்கள் வருமாறு;-

டி. விக்கினேஸ்வரன் (சிங்களவாடி)
ஆர். சகாயம் (தாண்டவன் வெளி)
ஏ. ஆரோக்கியநாதன் (வீச்சுக்கல்முனை)
ஜோன் கனிஸ்டர் ஜோக்குமார் (வீச்சுக்கல்முனை)
ஜோசப் பெனடிக் (வீச்சுக்கல்முனை)
ஆர். சச்சிதானந்தம் (செங்கலடி)
எஸ். பிரான்சிஸ் (வீச்சுக்கல்முனை)
பி. திருநாவுக்கரசு (வீச்சுக்கல்முனை)
என். ஜீவகன் (மட்டு நகர்)
எஸ். ரவிந்திரநாதன் (கல்லடி)
வி. நவரத்தினம் (குறிஞ்சாமுனை)
இ. ஞானசீலன் (மத்தியாஸ்வீதி)
எஸ். சாந்தகுமார் (ஆரையம்பதி)
கோபாலசிங்கம் (முனைக்காடு)
தங்கராஜா ஜேன் (சிங்களவாடி)

கூட்டணி நேரடி பேச்சு நடத்தினால் "புளொட்" ஆட்சேபிக்காது

சென்னை, டிச. 3

இலங்கை அரசாங்கத்துடன் தமிழர் விடுதலைக் கூட்டணி நேரடிப்பேச்சு வார்த்தை நடத்துமானால் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்[புளொட்] அதனை ஆட்சேபிக்கப் போவதில்லை.

தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தின் தலைவர் திரு. உமாமகேஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. ஜெயவர்த்தனா இராணுவ ரீதியில் நடவடிக்கை எடுத்துவருகிறார். அவருடன் பேச்சு வார்த்தை நடத்திப் பயனில்லை என்றும் திரு உமாமகேஸ்வரன் கூறினார்.

தெஹிவத்தையில் கண்ணிவெடி:

6 இராணுவ வீரர் பலி!

— திருகோணமலை மாவட்ட செய்தியாளர் எல். தம்பிராஜா —

திருகோணமலை, டிச.4

கண்ணிவெடி விபத்தில் ஆறு இராணுவ வீரர்கள் அந்த இடத்திலேயே இறந்தனர்.

இச்சம்பவம் மூதூர்த் தொகுதியில் தெஹிவத்தை கிராமத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை நடந்தது.

இதுபற்றிய விவரமாவது;

கவச வாகனம் ஒன்றில் ஆயுதப்படையினர் கந்தளாயில் இருந்து மூதூருக்குச் சென்று கொண்டு இருந்தனர். தெஹிவத்தை, ஒரு சிங்களக் கிராமம். அதற்கு அருகில் ஜீப் வந்தவுடன்

(4-ம் பக்கம் பார்க்க)

வெடிச்சத்தம் கேட்டபோது ஜீப் மேலே கிளம்பியது

திருகோணமலை, டிச.4

திடீரென்று வெடிச்சத்தம் கேட்டது. ஜீப் பல அடி தூரம் உயரக் கிளம்பி கீழே விழுந்தது. அதன் பின்னர் எம்மை நோக்கி துப்பாக்கிச் சூடுகள்வந்தன.

ஆயுதப்படை வீரர் ஆனந்த ஜயசிங்க ஆறு வீரர்களின் மரணம்தொடர்பான மரண விசாரணையில் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தெஹிவத்தையில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற கண்ணிவெடித்தாக்குதலில் மரணமான 6 இராணுவ வீரர்களின் மரண விசாரணையை திருகோணமலை நீதவான் ஹேமால் சேனாரத்ன நடத்தினார்.

ஆனந்த ஜயசிங்க சாட்சியமளிக்கையில் சொன்னதாவது:

கந்தளாயில் இருந்து உணவுப்பொருள்களை ஏற்றிக்கொண்டு மூதூர் சென்று கொண்டிருந்தோம்.

நாங்கள் லொறி ஒன்றில் சென்றோம்.

எம்மில் சிலர் முன்னால் ஜீப்பில் சென்றுக் கொண்டு இருந்தார்கள்.

தெஹிவத்தைக் கிராமம் வந்தது. திடீரென்று வெடிச்சப்தம் கேட்டது.

முன்னால் சென்ற ஜீப் பல அடிதூரம் மேலே எழும்பியது. பின்னர் கீழே விழுந்தது.

நாலா திக்கிலும் இருந்து சரமாரியாகத் துப்பாக்கிச் சூடுகள் வந்தன. நாங்களும் திருப்பிச் சுட்டோம்.''

இப்படிச் சாட்சி சொன்னார். கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

அகதிகளுக்கு திருச்சபை உதவி

யாழ்ப்பாணம், டிச.4

வடபகுதிக்கு இடம்பெயர்ந்து வந்த அகதிகளுக்கு நேற்று சங்கானையில் பார்சல்கள் விநியோகிக்கப்பட்டன.

தென் இந்திய திருச்சபை யாழ்ப்பாண ஆதீனம் இந்தப் பார்சல்களை நன்கொடையாக வழங்கி இருந்தது.

சங்கானை உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. வைத்திலிங்கம் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் வைத்து பார்சல்களை விநியோகித்தார்.

இது போன்ற பார்சல்களை தெல்லிப்பளை, உடுவில் பருத்தித்துறைஆகிய இடங்களில் உள்ள திருகோணமலை, வவுனியா மட்டக்களப்பு அகதிகளுக்கு தென் இந்திய திருச்சபை யாழ்ப்பாணம் ஆதீனம் வழங்கும்.

குண்டு துளைக்காத பெட்டிக்குள் இருந்தே நான் யாழ்ப்பாணம் போக முடியும்

இந்தியா நினைத்தால் இலங்கையை 24 மணித்தியால நேரத்தில் கைப்பற்றி என்னையும் கைது செய்யலாம் -- ஜே. ஆர்.

யாழ்ப்பாணம் டிச 4

நான் எப்படி யாழ்ப்பாணத்துக்கு போக முடியும்? எனது அமைச்சர்களோ எம். பி.க்களோ அங்கு போக முடியாதுள்ளது. என்னால் போக முடியாது. குண்டு துளைக்காத பெட்டியினுள் இருந்து தான் நான் அங்கு போக முடியும்.

இலங்கை நாட்டின் ஜனாதிபதி திரு.ஜே.ஆர். ஜெயவர்த்தனா 'இன்டியா டுடே'க்கு அளித்த பேட்டியில் இப்படித் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் தமிழ் ஈழத்தைக் கேட்கவில்லை என்று கூறும் நீங்கள் ஏன் வடபகுதி சென்று மக்களுடன் நேரடியாக பேசக்கூடாது? — என்று கேட்ட கேள்விக்குத் தான் திரு. ஜெயவர்த்தனா மேற்கண்டவாறு பதிலளித்தார்.

பேட்டி விவரம் வருமாறு;

வினா: தமிழர்களைப் பேச்சுவார்த்தை மேசைக்கு கொண்டு வந்தது பிரதமர் ராஜீவ் காந்தி தானே.

ஜே. ஆர்: ஆம் அவர் தான் அவர்களுடன் பேசுகின்றார்.

வினா: மிக மோசமானது ஒன்றுக்கு நீங்கள் தயாராகின்றீர்களா?

ஜே. ஆர். யாழ்ப்பாணத்தைச் சமாளிக்க நான் இன்னும் பூரணமாகத் தயாராக இல்லை. மற்ற மாகாணங்களை முதலில் முடித்துக் கொள்ளஇருக்கின்றேன். யாழ்ப்பாணத்தைக் கையாளுவது கஷ்டமான செயல் அல்ல.

யாழ் குடாநாட்டுக்கு உணவு விநியோகத்தை நிறுத்தி பயங்கரவாதிகளை ஒரு மாத காலத்தினுள் வெளியேற்றி விட முடியும்.

ஆனால் இந்தியா இந்த நடவடிக்கையை ஆதரிக்குமா?

வினா: தீவில் சமாதானம் எப்பொழுது நிலவும் என்று நினைக்கின்றீர்கள்?

ஜே. ஆர்.: பொறுத்து இருந்து பார்ப்போம். அடுத்த ஆண்டு வழமைக்குத் திரும்பலாம்.

வினா: பிரச்சினையைத் தீர்க்க இந்திய உதவியை நாடுகின்றீர்கள். பாகிஸ்தான், இஸ்ரவேல் நாடுகளில் இருந்து இராணுவ உதவியைப் பெறும் நீங்கள் எப்படி இந்திய உதவியை நாட முடிகின்றது?

ஜே. ஆர்: எமது வீரர்கள் பயிற்சி பெற வேண்டும். போதுமான ஆயுதங்களைப் பெற வேண்டும். இல்லாவிடில் அவர்கள் முடிந்து விடுவார்கள்.

பயிற்சிக்காக எமது வீரர்களை இந்தியாவுக்கு அனுப்பத் தயாராக உள்ளேன்.

இஸ்ரவேலியர்கள் எமது நண்பர்கள்.

சர்வதேச அரசியல் பற்றி எனக்கு சுதந்திரமான அபிப்பிராயம் உண்டு.

இஸ்ரவேலர்கள் எமது வீரர்களுக்கு உதவுகின்றனர்.

கைகளை இழந்த பத்து இலங்கை வீரர்களை நான் வைத்திய சிகிச்சைக்காக இஸ்ரவேலுக்கு அனுப்பியுள்ளேன்.

வினா: பெருமளவு ஆயுதங்களை ஏன் குவித்து வருகின்றீர்கள்?

ஜே. ஆர்: பயமுறுத்தல் வெளியில் இருந்தும் வருகின்றது. நாட்டினுள் இருந்தும் வருகின்றது. அதனால் தான் நாம் இவற்றைச் செய்கிறோம். யாராவது ஆக்கிரமிக்கக் கூடும் என்று நாம் பயப்

(4-ம் பக்கம் பார்க்க)

இளைய கலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

ஆயிரம் படங்களை தாண்டிய மனோரமா

திரையுலகிற்கு ''மாலையிட்ட மங்கை'' படம் மூலம் அறிமுகமாகியவர் மனோரமா. இன்று அவர் ஆயிரம் படங்களைத் தாண்டிய ஆச்சி.

முதன் முதலில் நாடகங்களில் நடித்து, பின் திரையுலகிற்கு வந்தவர் மனோரமா. திரையுலகில் தனது மனோரஞ்சிதமான நடிப்பின் மூலம் ஆயிரத்துக்கும் அதிகமான படங்களில் நடித்து இன்றும் புகழ் மங்காமல் ஜொலிக்கிறார் அவர்.

படங்களில் ஆபாச வார்த்தைப் பிரயோகம், கவர்ச்சியான ஆடை அலங்காரம் இவற்றை இவர் ஏற்றுக் கொள்வதில்லை.

பெரியவர்களுக்கு மரியாதை கொடுப்பதும், எல்லோருடனும் அன்பாகவும் பண்பாகவும் பழகுவதும்தான் இவரது உயர்ச்சிக்கு முக்கிய காரணம். இதைவிட என்றுமே இளமையாகத் தோற்றமளிக்கும் அதிசயமும் இவரது வெற்றிக்குக் காரணமாகிறது.

அவருடைய எல்லை கடந்த ரசனை உணர்வும் அவருடைய அதிஅற்புத நடிப்பாற்றலும் தமிழ்த் திரையுலக சரித்திரத்தில் என்றென்றும் யாராலும் அழித்துவிட முடியாத அதி அற்புத நடிகைக்கான அங்கீகாரத்தைத் தேடித் தந்திருக்கிறது.

அனுராதாவின் அவலம்!

''எனதுமுகல்படமான 'மோகனப் புன்னகை' வெற்றியை அடைந்திருந்தால் கதாநாயகியாக இன்று கொடி கட்டிப் பறந்து கொண்டிருப்பேன்' எனக் கூறுகிறார் நடிகை அனுராதா.

''என் துரதிர்ஷ்டம் இன்று உடம்பைத் திறந்து காட்டிஅங்கங்களை குலுக்கி, தெளித்துச் சுற்றிச் சுற்றி ஆடிக்கொண்டிருக்கிறேன்'' என மிகவும் கவலைப்படுகிறார் இவர்.

'சார்க்' மாநாட்டு

பூர்வாங்கக் குழு டாக்காவில் கூடியது

புதுடில்லி டிச. 3

தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பு சங்கத்தின் மாநாட்டுக்கான பூர்வாங்கஏற்பாட்டுக் குழுக் கூட்டம் நேற்று டாக்காவில் கூடியது.

எதிர்வரும் 7ஆம் திகதி ஆரம்பிக்கும் தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பு நாடுகளின் மாநாடு பற்றிய அடிப்படை ஆலோசனைகள் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டன.

'சார்க்' என அழைக்கப்படும் இந்த பிராந்திய சங்கத்தில் பங்களாதேஷ், பூட்டான், நேபாளம், சிக்கிம், இந்தியா, இலங்கை, மாலைதீவு ஆகிய 7 நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

★ அக்கியுனோ கொலை

மணிலா நீதிமன்ற தீர்ப்பு பிழையானது

அமெரிக்கா கண்டனம்

புதுடில்லி டிச. 3

முன்னாள் பிலிப்பீன்ஸ் எதிர்க்கட்சித் தலைவர் பெனிக்னோ அக்கியுனோ கொலை தொடர்பான சந்தேக நபர்களை பிலிப்பீன்ஸ் நீதிமன்றம் நிரபராதிகள் எனத் தீர்ப்பளித்துள்ளதை அமெரிக்கா கண்டித்துள்ளது.

சென்ற வருடம் மக்கள் விசாரணை மன்றத்தால் இவர்கள் குற்றவாளிகளாகக் காணப்பட்டிருந்தனர்.

''இப்பொழுது பிலிப்பீன்ஸ் நீதிமன்றம் இவர்களை நிரபராதிகள் எனத் தீர்ப்பளித்துள்ள செயல் தவறானது'' இவ்வாறு நீதிமன்றத் தீர்ப்பு அமெரிக்க வெளியுறவு இலாக்காவால் கண்டிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொலையில் பிலிப்பீன்ஸ் இராணுவ படைத்தளபதி பேபியன் வேர் என்பவருடன்வேறு இரு ஜெனரல்களும், 22 இராணுவ வீரர்களும் ஒரு பிலிப்பீன்ஸ் பிரஜையும் சந்தேக நபர்களாகக் காணப்பட்டிருந்தனர்.

பெனிக்னோஅக்கியுனோ 1983 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி அமெரிக்காவிலிருந்து பிலிப்பீன்ஸ் திரும்பிய பொழுதே கொலை செய்யப்பட்டார்.

அவர் நாடுகடத்தப்பட்ட பின் தொடர்ந்து 3 ஆண்டுகள் அமெரிக்காவில் தங்கி இருந்தார்.

வெற்றி வாய்ப்பு லிப்ரல் கட்சிக்கு

மொன்றீல், டிச.3

கனடாவில் உள்ள குவபெக் மாநிலத்தில் புதிதாக உருவான லிப்ரல் கட்சி வெற்றி பெறும் வாய்ப்பு உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சீக்கிய தீவிரவாதிகளுக்கு கனடா, அமெரிக்காவில் கூலிப்படையினர் பயிற்சி

இந்திய அமைச்சர் பகத்

புதுடில்லி டிச. 3

சீக்கியத் தீவிரவாதிகளுக்கு கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளில் கூலிப்படையினர் பயிற்சி அளித்து வருகின்றனர்.

இந்த விஷயத்தை சம்பந்தப்பட்ட நாடுகளின் கவனத்திற்கு இந்தியா கொண்டுவந்துள்ளது.

இத்தகவலை இந்திய வெளிநாட்டமைச்சர் திரு. பி. ஆர். பகத் நாடாளுமன்ற கூட்டத்தில் வெளியிட்டார்.

உறுப்பினர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இத்தகவலை வெளியிட்டார்.

அமெரிக்கா மீது மீண்டும் தாக்கு

மாஸ்கோ, டிச.3

அமெரிக்கா மீதான பத்திரிகைத் தாக்குதலை ரஷ்யா மீண்டும் ஆரம்பித்துள்ளது.

ஜெனீவா உச்சிமாநாட்டை ஒட்டி, ரஷ்யா பத்திரிகைத் தாக்குதலைக் குறைத்து இருந்தது.

1986 பெப்ருவரி 7ம் திகதி

பிலிப்பீன்ஸ் ஜனாதிபதி உபஜனாதிபதி தேர்தல்

மார்க்கோஸ் அங்கீகாரம்

மணிலா டிச3

பிலிப்பீன்ஸ் நாட்டு ஜனாதிபதி, உப ஜனாதிபதி தேர்தல்கள் அடுத்த ஆண்டு பெப்ருவரி 7ம் திகதி நடைபெறும்

இதற்கான சட்டத்தில் பிலிப்பீன்ஸ் ஜனாதிபதி பேர்டினன்ட் மார்க்கோஸ் நேற்றுக் கையெழுத்திட்டார்.

பிலிப்பீன்ஸ் நாடாளுமன்றம் இச்சட்டமூலத்தை அங்கீகரித்துவிட்டது.

இதனிடையில் ஜனாதிபதி தேர்தல் சட்டத்தை எதிர்த்து 12 எதிர்க்கட்சி எம்.பி.க்களும் வழக்கறிஞர் சங்கமும் உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளது.

இதனிடையில் சுட்டுக் கொல்லப்பட்ட எதிர்க்கட்சித் தலைவரின் 52 வயது மனைவி திருமதி. அக்கியுனோ, ஜனாதிபதி தேர்தலில் தான எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராகப் போட்டியிடப் போவதாக அறிவித்துள்ளார்.

திருமதி அக்கியுனோ தனது கணவரின் கொலை தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டவர்களை மணிலா நீதிமன்றம் விடுதலை செய்ததைத் தொடர்ந்தே இந்த அறிவிப்பு அவரால் வெளியிடப்பட்டது. பத்திரிகையாளர் மாநாட்டில் வைத்தே இந்த செய்தியை திருமதி அக்கியுனோ வெளியிட்டார்.

வெளி உலகில்

மதுபான விளம்பரங்கள் இடம் பெறு

புதுடில்லி டிச. 3

இந்தியாவின்வானொலி டெலிவிஷன் நிலையங்கள் நடத்தும் நிகழ்ச்சிகளில் மதுபான விளம்பரங்கள் இடம் பெற மாட்டா.

இத்தடை கடுமையாகக் கடைப்பிடிக்கப்படும் என்று இந்திய அரசு அறிவித்து உள்ளது.

''ஒல்லி உடம்பு வேண்டுமா?'' கிளினிக் ஆலோசனைக்கு எச்சரிக்கை

புதுடில்லி, டிச. 3

ஒல்லியான உடம்பைப் பெற விரும்புகிறீர்களா? எமது கிளினிக்குக்கு விஜயம் செய்யுங்கள்.

இப்படி விளம்பரஞ் செய்யும் நிலையங்களுக்கு செல்பவர்களுக்கு உடல் ஒல்லியாவதுடன் வேறு பல நோய்களும் ஏற்படுவதாக இந்தியாவில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

இத்தகவலை இணை அமைச்சர் திரு. அருணாசலம் புதுடில்லி ராஜ்ய சபையில் அறிவித்தார். இது சம்பந்தமான விசாரணை நடைபெறுகின்றது. விளம்பரங்கள் தவறானவை.

உடலை ஒல்லியாக்கும் நிலையங்களின் தவறான நடவடிக்கைகள் பற்றி ஆணைக்குழு ஒன்று விசாரணை நடத்த உள்ளது.

விசாரணை டிசம்பர் 16-ல் இடம்பெறும் — இப்படி இணை அமைச்சர் சொன்னார்.

அமெரிக்காவில்

உளவாளிகள் பெருக்கம்

றேகன் கவலை

கலிபோர்னியா, டிச. 3

எக்காலத்திலும் இல்லாத அளவு சோவியத் உளவாளிகள் அமெரிக்காவில் உள்ளனர்: அமெரிக்க ஜனாதிபதி றேகன் இப்படிக் கூறினார்.

உளவாளிகளைக் கண்டுபிடிக்க நிர்வாகம் முன்னுரிமை கொடுத்துள்ளது.

1975-ல் இருந்து 1980 வரை அமெரிக்காவில் 13 உளவாளிகளே பிடிபட்டனர்.

கடந்த 5 ஆண்டுகளில் 34 பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்தியா - சீனா நல்லுறவு

பீகிங், டிச. 3

இந்தியாவுடன் நல்லுறவை வளர்த்துக் கொள்ள சீனா விருப்பம் தெரிவித்து உள்ளது.

சீனாவிற்கு இந்திய கலாசாரத் தூதுக்குழு ஒன்று விஜயம் செய்துள்ளது.

அக்குழுவை சீன அதிகாரிகள் வரவேற்றுக் கௌரவித்தனர்.

விஞ்ஞான, கலாசாரத் தொடர்புகளை இந்தியாவுடன் வளர்த்துக் கொள்ள சீனா விரும்புவதாக சீன அதிகாரிகள் அப்பொழுது அறிவித்தனர்.

தெ. ஆ. தேசிய விடுதலை இயக்கத் தலைவர்

நெல்சன்மண்டலேக்கும் மனைவிக்கும் விருது

லண்டன் சர்வதேச அமைப்பு வழங்குகிறது

லண்டன், டிச. 4

தென் ஆபிரிக்காவின் தேசிய விடுதலை இயக்கத் தலைவர் நெல்சன் மண்டேலேக்கும் அவரின் மனைவிக்கும் கூட்டாக விருது ஒன்றை வழங்க, லண்டனை மையமாகக் கொண்டு இயங்கும் சர்வதேச அமைப்பு ஒன்று முன்வந்துள்ளது.

இன ஒதுக்கலை எதிர்த்துப் போராடி வரும் விடுதலை இயக்கத் தலைவர் திரு. மண்டலே. அவர் 23 வருடங்களாக தென் ஆபிரிக்க அரசினால் சிறை வைக்கப்பட்டுள்ளார்.

லண்டன் அமைப்பில் மூன்றும் உலக வளர்முக நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

இந்த விருதுடன் 1 லட்சம் அமெரிக்க டாலர் பணமும் வழங்கப்படும்.

கோலாலம்பூரில் 1986 முற்பகுதியில் இவ்விருது வழங்கும் வைபவம் நடைபெறும்-

பிரான்ஸ் குண்டு வெடிப்பு பெருவில் நில அதிர்வு

லிமா, டிச. 3

பிரான்ஸ் அண்மையில் அணுகுண்டு ஒன்றைப் பரீட்சார்த்தமாக வெடிக்க வைத்தபோது, பெரு நாட்டில் கடுமையான நில அதிர்வுகள் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

பெரு நாட்டு அதிகாரிகள் இது சம்பந்தமான ஆராய்ச்சி ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

இவ்விஷயம், பிரான்ஸின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவுள்ளது.

பிலிப்பீன்ஸ் ஜனாதிபதியை பெண் எதிர்க்கிறார்

மணிலா, டிச 3

பிலிப்பீன்ஸ் ஜனாதிபதி தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளராக திருமதி அக்யூனோ தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார்.

இவரின் கணவர்தான், எதிர்க்கட்சித் தலைவராக இருந்த திரு. அக்யூனோ.

அஞ்ஞாதவாசம் செய்து பிலிப்பீன்ஸ் திரும்பியசமயம் மணிலா விமான நிலையத்தில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டவர் திரு. அக்யூனோ.

பாரதத்தின்

அண்டை நாடுகளில் ஆயுதங்கள் குவிப்பு

குடியரசுத் தலைவர் எச்சரிக்கை

புதுடில்லி டிச. 3

பக்கத்து நாடுகளில் நவீன ஆயுதங்கள் குவிக்கப்பட்டு வருகின்றன. இது குறித்து பாதுகாப்புப் படைகள் விழிப்பாக இருக்க வேண்டும்.

இந்தியப் பாதுகாப்புப் படை அதிகாரிகள் மத்தியில் பேசுகையில் இந்திய குடியரசுத் தலைவர் கியானி ஜெயில்சிங் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்தியா சமாதானத்தை விரும்பும் நாடு' இருந்தாலும் நாட்டின் பாதுகாப்பைப் பலப்படுத்தும் விஷயத்தில் மெத்தனமாக இருந்துவிட முடியாது.

இப்படியும் குடியரசுத் தலைவர் குறிப்பிட்டார்'

யாழ் தெங்கு பனம்பொருள் சங்க

ஊழியர் கட்டாய சேமிப்பில் ஒரு கோடி ரூபா இருப்பு

கொக்குவில் டிச. 4

யாழ்ப்பாணமாவட்டத்தில் உள்ள பதினெட்டு தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்களின் கணக்கில் சுமார் ஒருகோடி ரூபா கட்டாய சேமிப்புப் பணமாக உள்ளது.

மேற்கண்ட தகவலை தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்க உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

'சங்கர் சேவா கேந்திரங்கள்'

காஞ்சி காமகோடிபீடம்நிறுவும்

சென்னை, டிச.3

காஞ்சி காமகோடி பீடம் இந்தியாவின் பல இடங்களில் 'சங்கர சேவா கேந்திரங்களை' நிறுவ இருக்கின்றது.

புராதன ஆலயங்களைப் புனரமைப்பது, ஆஸ்பத்திரிகள் கட்டுவது, வறியவர்களுக்கு சமயப்புத்தகங்களைவழங்குவது, ஒழுக்கக் கல்வியைப் போதிப்பது— போன்ற பணிகளில் இந்தக் கேந்திரங்கள் ஈடுபடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு நிலையத்திலும் பத்து ஆசிரியர்கள் பணிபுரிவரென்று காஞ்சி காமகோடி பீடாதிபதி சங்கராச்சாரிய சுவாமிகள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

கலவரத்தால் பாதிக்கப்பட்டு கிளிநொச்சி வந்தோம் ஆனால் துன்பம் தொடருகிறதே

மலையக சமூக மக்கள் மகஜர்

கிளிநொச்சி டிச. 4

1977 ஆம் ஆண்டு ஏற்பட்ட இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்டு கிளிநொச்சியில் வந்து குடியேறி பசியுடனும் பட்டினியுடனும் வாழும் எங்களுக்கு இன்னும் ஏன் இந்த சோதனை?

மேற்கண்டவாறு கிளிநொச்சி பாரதிபுரத்தில் குடியேறி வாழும் ஏழை விவசாயிகளான மலையக சமூக மக்கள் மகஜரொன்றின் மூலம் தமது மனத்துயரங்களைவெளிப்படுத்தியுள்ளனர்.

அவர்கள் தமது மகஜரை கிளிநொச்சி அரசாங்க அதிபர், கிளிநொச்சி பிரஜைகள் குழு, கண்காணிப்புக்குழு, இந்திய தூதரக அதிகாரி மற்றும் தொழிற்சங்கங்கள் ஆகியவற்றுக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

நாங்கள் கிளிநொச்சியில் குடியேறி எந்த உதவியுமில்லாமலே எமது சொந்த முயற்சியில் உயிர் வாழ்கிறோம். காட்டை அழித்து திருத்தி குடிசை அமைத்து வாழ்ந்து வருகிறோம்.

இந்த நிலையில் இடர்ந்து துன்புறும் எம்மை எமது இடத்திலிருந்து விரட்டி அடிக்கவும் திட்டங்கள் தீட்டப்படுவதாக அறியும்போது எமக்கு பெரிய மனவேதனை ஏற்படுகிறது. எமது இடங்களில் அரச படைகள் வந்து அப்பாவி மக்களைத் தாக்குகின்றன. ஏதுமறியா எமது மக்கள் பலர் காரணமின்றிக் கைது செய்யப்பட்டு முகாம்களுக்குக்கொண்டு செல்லப்படுகிறார்கள். அங்கு சொல்லமுடியாத சித்திரவதைக்குள்ளாகிறார்கள்.

எமது இடுக்கண்களை யாருக்கும் தெரியப்படுத்த முடியாத நிலையில் நாம் அல்லலுறுகிறோம்.

தொழில்களையோ அல்லது எமது அன்றாட சீவனோபாயத்தையோ பயமின்றி மேற்கொள்ள முடியவில்லை.

சென்ற நவம்பர்மாதம் 17ஆம் திகதி எமது கிராமத்துள் புகுந்த அரச படை பல அப்பாவித் தொழிலாளர்களைத் தாக்கியும், கைது செய்தும் துன்புறுத்தியது. ஒரு கர்ப்பிணிகூட துப்பாக்கி முனையில் பயமுறுத்தப்பட்டார்.

இத்தனையும் நடந்து கொண்டிருக்கும் பொழுது மலையக மக்களுக்காகக் குரல் கொடுக்கும் தொழிற் சங்கங்களும் பாராமுகமாக இருப்பது பெரிய வேதனையை மேலும் தருகிறது.

எமது இந்த நிலையை நீங்கள் புரிந்து கொண்டு அப்பாவி மக்கள் கைதுசெய்யப்படாதிருக்கவும், கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்கவும் இராணுவக் கெடுபிடிகள் ஏற்படாதிருக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும்.

ஆட்சியாளருக்கும் உணர்த்த ஆவன செய்ய வேண்டும்.

மயான அபிவிருத்தி நிதி ஒதுக்கீடு

காங்கேசன்துறை. டிச. 3

தெல்லிப்பழை கொத்தியால், கட்டுப்பிட்டி ஆகிய இரு மயானங்களையும் அபிவிருத்தி செய்ய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை, மயிலிட்டி உபஅலுவலகங்களின் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் இம்மயானங்களைப் பார்வையிட்டு அபிவிருத்தி நடவடிக்கைகள் பற்றி ஆராய்ந்தனர்.

வசாவிளான் கிராம சேவையாளர் திரு. யோ அருளானந்தம், தெல்லிப்பழை வைத்தியசாலை கமிட்டி தலைவர் திரு இ. சபாரத்தினம் ஆகியோரது முயற்சியால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

கொத்தியால் மயான அபிவிருத்திக்கு 15,000 ரூபாவும் கட்டுப்பிட்டி மயான அபிவிருத்திக்கு 50ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டு அபிவிருத்தி வேலைகள் விரைவில் மேற்கொள்ளப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இளைஞர் ஓட சூடு விழுந்தது

மட்டக்களப்பு, டிச. 4

மட்டக்களப்பு, அரசடிச் சந்தியில் ஆயுதப் படையினர் சுட்டு இளைஞர் ஒருவர் பலியானார்.

திங்கட்கிழமை காலை 9-30 மணியளவில் இச்சம்பவம் நடந்தது.

ஆயுதப் படையினர் ரோந்து வந்தபோது இந்த இளைஞர் ஓடினாராம். உடனே படையினர் சுட்டுவிட்டனர்.

இளைஞரின் சடலம், அடையாளம் காணப்படாத நிலையில் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது.

விசாரணைக்கு கோரிக்கை

மட்டக்களப்பு, டிச. 4

தனியார் பஸ்ஸில் சென்ற நான்கு தமிழர்கள் மாதுறுஓயாவில் வைத்துக் கொலை செய்யப்பட்டது குறித்து பூரண விசாரணை நடத்தும்படி மட்டக்களப்பு — கல்லடி பிரஜைகள் குழு ஜனாதிபதியைக் கேட்டுள்ளது.

அந்தத் தனியார் பஸ்ஸில் 6 தமிழர்கள் சென்றனர். 4 தமிழர்கள் கொலை செய்யப்பட்டனர்.

வடபகுதி விவசாயிகள் கோரிக்கை நிராகரிப்பு

இம் முறையும் உள்ளூர் விதை உருளைக்கிழங்கு தான்

அச்சுவேலி டிச. 4

வடபகுதிக்கான விதை உருளைக்கிழங்கு விநியோகத்திற்கு இம் முறையும் முழுக்க முழுக்க உள்ளூர் விதை உருளைக்கிழங்கே வழங்கப்படவுள்ளது. வெளிநாட்டு விதை கிழங்கு கேட்டு விடுக்கப்பட்ட கோரிக்கை கைகூடவில்லை.

கடந்த காலங்களில் கணிசமான அளவு பங்கு வெளிநாட்டு விதை கிழங்கு வடபகுதி விவசாயிகளின் பாவனைக்கு வழங்கப்பட்டு வந்தது.

இந்த நடைமுறை கடந்த வருடம் முற்றாக நிறுத்தப்பட்டது.

சென்ற வருடம் வடபகுதி விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட உள்ளூர் விதை கிழங்கு போதிய விளைச்சலைக் கொடுக்கவில்லை. அத்துடன் புதிய பல நோய்களைக் கொண்டதாகவும் இருந்தது எனக் குறை கூறப்பட்டது.

இதனைக் கருத்தில் கொண்டு இந்த வருட உருளைக்கிழங்குச் செய்கைக்கு வெளிநாட்டு விதைகிழங்கு வழங்கப்பட வேண்டுமென்றும் பாதிப்படைந்த விவசாயிகளுக்கு போதியளவு நஷ்டஈடு அளிக்கப்பட வேண்டும் என்றும் வடபகுதி விவசாய அமைப்புக்கள் அரசாங்கத்திடம் கோரிக்கை விட்டிருந்தன.

இக் கோரிக்கை தற்போது முற்றாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளது.

இம் முறைக்கான விதை உருளைக்கிழங்கை நுவரெலியா விதை உருளைக்கிழங்குக் களஞ்சியத்திலிருந்து பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உருளைக்கிழங்கு விநியோகத்திற்குப் பொறுப்பான அமைப்புகளுக்கு கமத் தொழில் திணைக்களம் அறிவித்துள்ளது.

உதய சங்கற்பம்

செல்வம் உள்ள மூடரினும்,
வறுமை உள்ள வித்துவானையே
எங்கும் நன்கு மதிக்கப்படுவர்.

- நாவலர் பெருமான்.

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை
இல: 15, 2வது ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலை பேசி: 24805
22073
4-12-85
த. பெ. 28

மாநகர ஆணையாளரின் பகீரதப் பிரயத்தனம்

யாழ்ப்பாண மாநகரில் நிரந்தர வெள்ளத் தடுப்புத் திட்டம் ஒன்று செயற்படுத்தப்படும். இதற்கான நடவடிக்கைகளை மாநகர ஆணையாளர் திரு. சி. வீ. கே. சிவஞானம் மேற்கொண்டு வருகிறார்.

யாழ்ப்பாண மாநகர சபைப் பிரதேசத்தில் வாழும் மக்களுக்கு மிகவும் இனிப்பான செய்தி இது. செய்தியோடு மட்டும் இனித்துவிட்டு, நடைமுறையில் — செயலில் அது கசந்துவிடக் கூடாது என்றே மாநகர மக்கள் எல்லோரும் விரும்புவர்.

நாட்டின் முக்கிய நகரங்களில் கொழும்புக்கு அடுத்த இடம் யாழ்ப்பாணத்துக்கு இருந்தது. அது அந்தக் காலம். அபிவிருத்தி வேலைகளும், அவற்றுக்கான நிதியும் தெற்குக்கு மட்டுமே புரண்டோடத் தொடங்கிய பின்னர் யாழ்ப்பாணத்தால் முக்கிய ஸ்தானத்தைக் காப்பாற்ற முடியவில்லை.

யாழ்ப்பாண நகரின் சுகாதாரம், வீதிப் போக்குவரத்து, அத்தியாவசிய சேவைகள் என்பன மெச்சிச் சொல்லுமளவுக்கு இல்லை. எனினும் மாநகர ஆணையாளர் அவற்றைச் சீராக்குவதற்காகத் தம்மால் இயன்றளவு — தமது சக்திக்கு உட்பட்ட அளவு முயற்சி செய்து வருகிறார். அந்த முயற்சிகளில் ஒன்றுதான் வெள்ளத் தடுப்புக்கான நிரந்தரத் திட்டம் என்று சொல்லலாம்.

சென்ற மாத இறுதியில் குடாநாடெங்கும் பேய் மழை பெய்து பெருவெள்ளம் தேங்கியது. யாழ்ப்பாண மாநகரமும் தப்பவில்லை. நகர மக்கள் வெள்ளத்தின் கோரப் பிடியில் சிக்கித் தவித்தனர்.

கிராமங்களில், தாழ்ந்த பிரதேசங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்படுவதை ஜீரணித்துக் கொள்ளலாம். ஆனால் நகர நிர்மாணம், வடிகால் திட்டம் என்ற பல பாரிய செயல் முறைகளை அனுசரித்துப் பராமரிக்கப்படும் நகரங்களில் வெள்ளப் பாதிப்பு ஏற்படுவது விசனத்துக்கு உரியதாகும். நகரம் ஒன்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டால் அது பொதுவாக நிர்வாக இயந்திரத்தின் அக்கறையின்மையையே குறிக்கும்.

யாழ்ப்பாண நகரில் வெள்ளப் பெருக்கு அடிக்கடி உண்டாவதற்கான காரணங்களை மாநகர ஆணையாளர் 'உதயன்' பேட்டியில் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

யாழ்ப்பாண மாநகர சபைப் பிரதேசத்துக்கு வெளியே சேரும் வெள்ளமும், யாழ் நகர் ஊடாகவே பாய்ந்து செல்கிறது. யாழ் நகரில் முன்னரைவிட அதிக வீடுகள் கட்டப்படுகின்றன. தாழ்ந்த பிரதேசங்களிலும் வீடுகள் நிரம்ப 'முளைக்கின்றன'. வீடுகளைச் சுற்றி மதில்கள் கட்டும்போது நீரோட்டத்துக்கு வகை செய்வதில்லை.

இவற்றை எல்லாம் நிவிர்த்தி செய்து, நகரில் வெள்ளப் பெருக்கு ஏற்படாத விதத்தில் பெரும் பணச் செலவில் நிரந்தர தடுப்புத் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த ஆணையாளர் உத்தேசித்திருக்கிறார். அதற்குத் தேவையான நிதி, தொழில்நுட்ப வசதிகள் ஆணையாளருக்குக் கிடைக்கவேண்டும் என்பதே எமது பெரு விருப்பம்.

தமிழ்ப் பகுதிகளுக்கு அரசாங்கம் செய்யும் வசதிகளும், உதவிகளும் பூஜ்யத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் வேளை இது. இத்தருணத்திலும் நகர மக்களை வெள்ளப் பெருக்கிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்ற தமது எண்ணத்தை செயற்படுத்த ஆணையாளர் முன்வந்திருக்கிறார். அவரது பகீரதப் பிரயத்தனத்துக்கு உள்மட்டத்தில் உள்ள சகலரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

பாகிஸ்தான் செனட்டில் பெண்களுக்கு இடமில்லை

இஸ்லாமாபாத், டிச. 3
பாகிஸ்தான் 'செனட்' சபையில் தொடர்ந்தும் பெண்களுக்குஇடமில்லை.

செனட்சபையில் ஒரு குறிப்பிட்ட அளவு பெண் உறுப்பினர்களுக்கு இடம் ஒதுக்கப்படவேண்டும் என்று பிரேரணை ஒன்று தாக்கல் செய்யப்பட்டது.

பெரும்பான்மையான செனட் உறுப்பினர்கள் இப்பிரேரணையை நிராகரித்துவிட்டனர்.

பெண், அன்னையாகவும் குடும்பப் பெண்ணாகவும் மட்டுமே இருக்குமென்றே ஆண் கருதுகின்றது. ஆகவே செனட்டில் பெண்களை அங்கம்வகிக்க விடக்கூடாது — இப்படி அவர்கள் பிரேரணை நிராகரிப்புக்கு ஆதாரம் காட்டினர்.

இதன் காரணமாக பாகிஸ்தான் செனட் சபையில் தொடர்ந்து ஆண்கள் மட்டுமே அங்கம் வகிப்பர்.

மன்னாரில் கொள்ளை

யாழ்ப்பாணம் டிச. 4

மன்னார் நெடுஞ்சாலை திணைக்களத்தில் பெரும் தொகையான பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டன.

வெள்ளி இரவு இந்தச் சம்பவம் நடந்தது. திணைக்களத்துக்குள் புகுந்த இனந்தெரியாதவர்கள் அங்கு கடமையில் இருந்த காவலாளியைத் துப்பாக்கி முனையில் பயமுறுத்தி இக்கொள்ளையை நடத்தினர்.

நாவலரின் கலைப்பணி தனித்துவமானது

பழைமையில் ஊறியவராஜனும் புதுமையையும் வரவேற்றார்

த. சண்முகசுந்தரம் (பி. ஏ.)

இன்று நாவலர் பெருமானின் 107 ஆவது குருபூசை. இத்திருநாளையொட்டி இக்கட்டுரை சிறப்பாக வெளியிடப்படுகிறது.

கல்வியின் நோக்கம் கடவுளை அடைதல். கலைகளின் நோக்கம் கடவுளைச் சேவித்தல். இவை தமிழன் கண்ட சால்பின் தேறல்.

நல்லவற்றைக் கற்று கடவுளை அடைய முயல வேண்டும். அல்லாதவற்றை ஒதுக்கி விடுதல் வேண்டும். கலை தூய்மையானது. அதன் தூய்மையான நோக்கம் கடவுளுக்குப் பணி செய்தல்.

"எமதுபிறப்பின்நோக்கம் வீடு பேறு அடைய வேண்டும்" என்ற கருத்தைச் சைவப் பெருமக்கள் போற்றி வந்தனர். இதனையே நாவலர் அழுத்தம் திருத்தமாக வலியுறுத்தினார்.

"இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தி இன்பம் பெறும் பொருட்டேயாம்" என நாவலர் அறுதியிட்டுக் கூறினார்.

இதற்காகவே கல்வியும் கலைகளும் தொழிற்பட வேண்டும் என்பது நாவலரின் நம்பிக்கை. நாவலர் இக்கால நவீன கல்வியைப் பெரிதும் நாடினார். ஆனால் அந்தக் கல்வியிலும் கூட மதம் முக்கியமான இடத்தைப் பெற வேண்டும் என்பது அவரின் கருத்து. இந்த உண்மையை இக்காலக் கல்வி விற்பன்னர் உணர்ந்து விட்டனர்.

இதனாலேதான் கல்வி கற்கும் ஒவ்வொரு குழந்தையும் தன் மதம் பற்றிய அடிப்படை அறிவைப் பெற வேண்டும்; அன்பு நெறி உள்ளத்தில் வளர வேண்டும் என்பதை இக்கால அறிஞர்கள் வலியுறுத்துகின்றனர்.

கலையுணர்வு நன்கு அமைந்தால் மக்களின் உள்ளம் பண்படையும் என்பதை இக்கால கல்விமான்கள் உணர்ந்துள்ளனர்.

கலை மறுமலர்ச்சி

ஈழத்துக் கலை மறுமலர்ச்சியில் நாவலர் பெரும் பங்குகொண்டார். கனவு கண்டார். அவர் தோற்றுவித்த கலை மறு மலர்ச்சி வளர்ச்சியுற்றதுஈழத்தில்

தமிழ்நாட்டில் நாவலர் பின்பற்றிய கலைப் பாதை தமிழ்மரபு கெடாத ஒரு பாதை. அங்கு கலை வளர்ச்சிக்கு அதிகம் உழைக்கத் தேவையில்லை. முடிவேந்தர் ஆட்சி அங்கு அகன்றாலும், மடங்களும் திருக்கோயில்களும் தமிழ் கலைகளை அழிய விடாது காத்து வந்தன. அங்கு மரபு கெடாமல் பார்ப்பதே நாவலர் நோக்கம்;

கோயில் அமைப்பு

நாவலர் கண்ட கலை பெரும்பாலும் கோயில் வளர்த்த கலையாகவே அமைந்தது. முதலாவதாக போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்ட சைவக்கோயில்கள்யாவும் திருப்பிக் கட்டப்பட வேண்டும் என நாவலர் பெரிதும் முயன்றார். கோயில் அமைப்பு சிற்பம் போன்றவை எல்லாம் வேதாகம முறைக்கு அமைய வேண்டும்; அவை சைவ மரபிற்குட்பட்டிருத்தல் வேண்டும் என்பதில் நாவலருக்குத் திட்டவட்டமான கொள்கை உண்டு. இதற்கு ஓர் எடுத்துக்காட்டு. நாவலர் தவிப்பட்ட முறையில் பெரிதும்விரும்புவது பிறநாட்டிலிருந்து வந்த ரோசாமலர்.

இதை வழிபாட்டிற்காக எடுக்கலாமோ என்பதில் நாவலருக்கு ஓர் ஐயம் தோன்றியது. பல நாட்களாக இது பற்றிச் சிந்தனை செய்தார். ரோசா மலரை கோயில் வழிபாட்டிற்குப் பயன்படுத்தலாமோ இல்லையோ என்பது பற்றி யோசித்தார்.

இறுதியில் கோயில் வழிபாட்டிற்கு ரோசாப் பூவைப் பயன்படுத்தப்படாது என அவர் முடிவு செய்தார்.

கருங்கல் திருப்பணி

நாவலர் கண்ட திருக்கோயில் அமைப்பு வேதாகமமுறைக்குஅமைந்த அமைப்பு. இதற்குப் பயன்படுத்த வேண்டியது கருங்கல்.

யாழ்ப்பாணத்தில் கருங்கல் திருப்பணிக்கு கல்லில்லை. கருங்கல் இல்லாதவிடத்துச் சுண்ணாம்புக்கல், முருகைக்கல், சுண்ணாம்பு செங்கட்டி போன்றவற்றைப் பயன்படுத்தலாம் என்பது நாவலரின் கருத்து.

தமிழ்நாட்டில் மூவேந்தர் கட்டிய பாரிய கோயில்களைப்போலவோ அல்லது ஈழத்தில் தமிழ் வேந்தர் கட்டிய கோயிலைப் போலவோ பெரிதாகப் புதுக்கோயில்கள் அமைய வேண்டும் என நாவலர் விரும்பியதாகத் தெரியவில்லை.

உருவத்தில் யாழ்ப்பாணத்துக் கோயில்கள் சிறியவையாக அமையலாம். ஆனால் மரபு வழி வந்த அமைப்பு, கலை வடிவம் மாறப்படாது என்பது நாவலர் உள்ளத்தில் கொண்ட கருத்து.

திருக்கோயில் அமைப்புக் கலைக்கு நாவலர் எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்தாரோ அதே அளவு முக்கியத்துவத்தை அவர் கடவுளர் உருவ அமைப்புச் சிலைகளுக்கும் கொடுத்தார்.

வேலை தனியே வைத்து மட ஆலயங்கள், கிராமியக் கோயில்கள் போன்றவற்றில் வழிபடுவதற்கு நாவலர் மறுப்புத் தெரிவித்ததாகத் தெரியவில்லை.

ஆனால் வேலுக்கு இருமருங்கும் சக்தியர் இருவரையும் வைத்து வழிபடுவதை நாவலர் மறுத்தார் என்ற கருத்தை இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை தெரிவித்துள்ளார்.

கோயில்களில் கடவுளரைப் பிரதிட்டை செய்தல் சிலைவடித்தல் என்பவற்றில் நாவலர் திட்டவட்டமான கருத்துக் கொண்டிருந்தார்.

சுவாமியை எழுந்தருளச் செய்யும் போது ஒரு முறை திருவாசி இல்லாமல் யாரோ செய்து விட்டனர். இது நாவலருக்குப் பெரும் கோபத்தைத் தோற்றுவித்தது. காரணம் இப்படியான செயல் ஆகமவிரோதம். அதுமட்டன்று கடவுளர் சிலைக்குப் பொலிவைத் தருவது பிரணவவடிவாம் திருவாசி. சுவாமி எழுந்தருளும் போது, கொடி, குடை, ஆலவட்டம், தீவர்த்தி என்பன முறையாக ஒழுங்காக பிடிக்க வேண்டும். அதுதான் முறை. அப்படியானால் தான் திருவிதி உலா அடியார்கள் உள்ளத்தில் பெரும் எழுச்சியை ஏற்படுத்தும் என்பதனை நாவலர் உணர்ந்திருந்தார்.

ஆகமவிதி

ஆகமவிதி என்றால் அது கண்டிப்பாக முழுமையாகப் பின்பற்றவேண்டியது என்பதில் நாவலருக்குச் சற்றேனும் ஐயமில்லை. அதே நேரத்தில் அழகு உணர்ச்சி அன்பு நெறியை வளர்த்து விட வேண்டும் என்பதை விரும்பினார். கோயிலில் உள்ள வாகனம், தண்டிகை, சப்பறம், தேர், பூப்பந்தல் எல்லாம் அழகாக அமைய வேண்டும் அதே நேரம் ஆகம விதிகளை மீறக் கூடாது என்பதை நாவலர் அழுத்திக் கூறினார்.

நாவலருக்கு இசை அறிவு பரந்திருந்தது என்றும், அவர் குரல் வளம் நிரம்பியவர் என்றும் அவரின் அன்பர்கள் சொல்வார்கள்.

திருக்கோயிலில்இசைப் பணிபுரியும் இசை வேளாளர் ஆன்றோர் வகுத்துள்ள இசைமரபு கெடாமல் வாசிக்க வேண்டும் என்பதே நாவலரின் நம்பிக்கை.

பண்டைய இசைவிற்பன்னர் இன்ன பூசைக்கு இன்ன இராகம் வாசிக்க வேண்டும் என வகுத்துள்ளனர். இதனையே

(4ஆம் பக்கம் பார்க்க)

பொய்யாமொழி

அறவாழி அந்தணன் தாள் சேர்ந்தார்க் கல்லாற்
பிறவாழி நீந்தல் அரிது

அறக்கடலாக விளங்கும் கடவுளின் திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவர்க்கு அல்லாமல், மற்றவர் பொருளும் இன்பமுமாகிய மற்றக் கடல்களைக் கடக்க முடியாது.

நாவலர் - கற்றவர்க்கேறு

கல்விக் களஞ்சியங் கற்றவர்க் கேறு கருணைவள்ளல்
சொல்வித் துவப்பிர சாரகன் பூதி துலங்குமெய்யன்
நல்லைப் பதியின ஞறு முகப்பெரு நாவலனுந்
தில்லைப் பதியி னடராசன் சேவடி சேர்ந்தனனே.

என்கடித மென்கவிதை யார்க்கு மினிதென்று
நன்குறவே பாராட்டு நாவலனு—ரெங்கோயோ
கங்கைமுடிச் சங்கரன் பொற் கஞ்சமலர்ச்
செஞ்சரண்விட்
டிங்குவர வுங்கருத்தோ வென்.

நாவலர் சிவபதமடைந்தபோது சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர் பாடிய பாடல்.

வித்தாரம்

என்ன முரளி! நல்லாக் களைச்சுப்போனாய். கச்சேரிப்பக்கம் போய்வாறு யாக்கும்.

அடடே!-விஷயம் தெரியாமல் ஏன் அங்கை அலைஞ்சுவாறாய். அங்கை, இப்ப ஒரு கிழமைக்குக் கூட, பெரிய ஆக்களிலை பலரும் தங்கடை கதிரையளிலை இல்லை.

என்ன பேந்தப் பேந்தப் பாக்கிறாய்.

அவையளிலை பலபேர் கொழும்புக்குப் போயிட்டினம். அங்கத்தை உயர்மட்டத்தின்ரை அழைப்பைஏற்றுப்போனதாகத்தான் கேள்வி.

அவைமட்டுமில்லை. கிளிநொச்சி, வவுனியா, மட்டக்களப்பு கச்சேரிகளிலையும் பல பெரியவை இல்லையாம்.

தமிழ்ப் பகுதிகளில சிவில் நிர்வாக முறையிலை ஏதோ ஒரு மாற்றம் வரப்போகுதெண்டு பரவலாகக்கதைக்கினம். அதுக்கு முன்னோடியாகத்தான் இவையளை அங்கை கூப்பிட்டிருக்கினம் எண்டு "முடிச்சு"ப் போடுகினம் இங்கை.

மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போடுறதிலைஎங்கடை தமிழ் ஆக்கள் சரியான கெட்டிக்காரர் பாருங்கோ.

அக்கரையிலை உள்ளவைக்கு எங்கடை விஷயத்திலை அக்கறை இருக்கும்வரைக்கும் இஞ்சை ஆட்கள் நினைக்குமாப் போலை பெரிய மாற்றம் எதுவும்நடக்காது எண்டு சிலபேர் நம்புகினம்.

எல்லாம் போகப் போகத்தான் தம்பி தெரியும்.

இனப் பிரச்சினைத் தீர்வு:

அரசு தயாரித்த நகல் செயல் திட்ட யோசனை

பகுதி ஒன்று

மத்திய அரசாங்கத்தைத் தவிர்ந்த, அரசின் ஏனைய பிரதான முகவர்கள் அரசின் அதிகாரங்களைச் செலுத்தக் கூடியதாக, அரசமைப்புச் சட்டத்துக்கு உட்பட்ட முறையில்,

(அ) ஒவ்வொரு மாகாணத்துக்கும் ஒரு மாகாணசபை—

(ஆ) ஒவ்வொரு நிர்வாக மாவட்டத்துக்கும் ஒரு மாவட்டசபை—

(இ) ஒவ்வொரு பிரதேச உதவி அரசாங்க அதிபர் மட்டத்திலும் ஒரு பிரதேச சபை—

என்றவாறு திருத்தி அமைக்கப்படும்.

2. தற்போது உள்ள மாகாண எல்லைகளே மாகாண சபைகளின் எல்லைகளாக இருக்கும்,

3. நிர்வாக மாவட்டங்களின் தற்போதைய எல்லைகளே, மாவட்ட சபைகளின் எல்லைகளாக இருக்கும்.

எல்லைகளை மாற்றும் நாடாளுமன்றத்தின் அதிகாரத்தை இந்த மாகாண சபை, மாவட்ட சபை எல்லை நிர்ணயம் கட்டுப்படுத்தாது.

4. திருகோணமலைத் துறைமுகத்திற்கும்அதன் சுற்றுப்புறங்களுக்கும் என்று தனி அதிகார சபை நிறுவப்படும். அந்த சபை அப்பிரதேசத்தின் பொருளாதார அபிவிருத்தி, நிர்வாகம் முதலியவற்றிற்குப் பொறுப்பாக இருக்கும்.

அந்த அதிகாரசபையின் கீழ்வரும் பிரதேசம், எந்த மாகாண சபை, மாவட்ட சபை எல்லைக்குள்ளும்கொண்டு வரப்படமாட்டாது.

அந்த அதிகாரசபையின் நிர்வாக எல்லை பின்னர் ஆலோசிக்கப்படும்.

மாகாண சபை நிறுவுதல்

5. மாகாண சபைகளை உருவாக்குதல், அதிகாரப் பரவலாக்கல்-- இவை சம்பந்தமான சட்டமூலம் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படும்.

அதன் பின்னர் நாடாளுமன்றம் இன்னொரு சட்டமூலத்தை நிறைவேற்றும். இந்தச் சட்டமூலம் மாகாண சபைகளுக்குத் தேவையான சட்டவாக்க அதிகாரங்களை நேரடியாக வழங்கும்.

அந்த சட்டவாக்க அதிகாரங்களை ரத்துச் செய்யவோ, திருத்தவோ நாடாளுமன்றத்தினால் மட்டுமே முடியும். வேறு எந்தவிதமாகவும் செய்ய முடியாது.

சம்பந்தப்பட்ட மாகாண சபை, அல்லது மாகாண சபைகளுடன் ஆலோசித்த பின்னர் நாடாளுமன்றம் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன், இந்த சட்ட ஆக்க அதிகாரங்களை ரத்துச் செய்யலாம். அல்லது திருத்தலாம்.

6. இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட திகதியிலிருந்து 30 தினங்களுக்கு இடையில் அரசமைப்புச் சட்டத்தைத் திருத்துதல், சட்டமூலங்களை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுதல் ஆகியன ஆரம்பமாகும்.

சர்வஜன வாக்கெடுப்பு தேவையில்லை

7. மாகாணசபை நிறுவுதல், அதிகாரப் பரவலாக்கல் அதிகாரங்களை அவற்றிற்கு வழங்குதல் ஆகியன சம்பந்தமான அரசமைப்புத் திருத்தங்களுக்கு ஒரு சர்வசன வாக்கெடுப்பில் அங்கீகாரம் பெறத் தேவையில்லை.

சட்டவாக்க அதிகாரங்கள்

8. மாகாண சபைகளுக்கான முக்கிய அதிகாரங்கள் வருமாறு:

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மாகாணசபைச் சட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள விஷயங்கள் சம்பந்தமாக சட்டலாக்கங்களை நிறைவேற்றும் அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு வழங்கப்படும்.

நிறைவேற்று அதிகாரங்கள்

9. மாகாண சபை உறுப்பினர்களின் நம்பிக்கையைப் பெறக்கூடிய ஒரு சபை உறுப்பினரைச் சபையின்பிரதம நிர்வாகியாக ஜனாதிபதி நியமிப்பார்.

அந்தப்பிரதம நிர்வாக சபை உறுப்பினர்களில் இருந்து நிறைவேற்றுக் குழுவைத் தெரிவுசெய்வார்.

10. பிரதம நிர்வாகிகளின் சிபார்சின்பேரில், நிறைவேற்றுக்குழு உறுப்பினர்களை ஜனாதிபதி நியமனஞ் செய்வார்.

அதன்பின்னர் பிரதம நிர்வாகிக்கும் நிறைவேற்றுக்குழு உறுப்பினர்களுக்கும் நிறைவேற்று அதிகாரங்கள் பாரப்படுத்தப்படும்.

மாகாணசபையின் பிரதம நிர்வாகியும் நிறைவேற்றுக்குழு உறுப்பினர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களாகஇருக்க

(4ஆம் பக்கம் பார்க்க)

இலங்கை அரசினால், இனப்பிரச்சினை தீர்வுக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட நகல் செயல் திட்ட யோசனைகள் இப்பொழுது வெளிவந்துள்ளன.

இந்த யோசனைகளை, தமிழீழ விடுதலை அமைப்புக்கள், தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியன கூட்டாக நிராகரித்து விட்டது குறிப்பிடத்தக்கது.

நகல் திட்ட யோசனைகள் உதயனில் இன்றுமுதல் பிரசுரமாகிறது.

சித்த வைத்திய மாணவர் தஞ்சாவூரில் பட்டப் பின்படிப்பு

யாழ்ப்பாணம், டிச. 4

யாழ். பல்கலைக்கழக சித்த வைத்தியத்துறை மாணவர்கள் தஞ்சாவூர் பல்கலைக்கழகத்தில் பட்டப்பின்படிப்பு மேற்கொள்ள வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட உள்ளன, அத்துடன் இத்துறை தொடர்பான ஆராய்ச்சி மேற்கொள்ளவும் அவர்களுக்கு வாய்ப்பு ஏற்படுத்தப்படும்.

பல்கலைக்கழகத் துணைவேந்தர் கலாநிதி சு. வித்தியானந்தன் அண்மையில் தஞ்சாவூர் பல்கலைக்கழகத்துக்கு விஜயம்செய்தவேளையில் இதற்குரிய பூர்வாங்க முயற்சிகளை மேற்கொண்டார்.

நல்லூர் அகதிகளுக்கும் துணிவகை

நல்லூர் டிச.4

நல்லூர் தமிழ் மகளிர் அவையில் உள்ள அகதிகளுக்குத் துணி வகைகளை வழங்க யாழ். திட்டமிடல் பிரதி அதியட்சகர் திரு. எஸ். சிவதாசன் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

அகதிகளுக்கு உண்டியல் மூலம் நிதி சேகரிப்பு

பருத்தித்துறை டிச. 3

திருகோணமலை அகதிகளுக்காக பருத்தித்துறை, நெல்லியடிப் பகுதிகளில் உண்டியல்கள் மூலம் நிதி சேகரிக்கப்பட்டது.

நல்லூர் சங்கிலித் தோப்பு பகுதியில் அமைந்துள்ள அகதிமுகாமில் உள்ள திருகோணமலை அகதிகளுக்கே இவ்வாறு நிதி சேகரிக்கப்பட்டது.

இந்த அகதிமுகாமைச் சேர்ந்த தொண்டர்கள் பருத்தித்துறை, நெல்லியடி பஸ் நிலையப் பகுதிகளிலும், அவற்றின் சூழல்களிலும் உண்டியல்களைக் குலுக்கி நிதி சேகரித்தார்கள்.

ஐஸ்கிறீம், கேக் வகைகள், பழரச
பானங்கள் இவைகளைச் சுவை குன்றாமல்
தயாரிப்பதற்குத் தேவையான மூலப்
பொருட்கள் யாவற்றையும்
பெற்றுக்கொள்ள
*
அபிராமி எசன்ஸ் றேட்ஸ்
31, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(காரைநகர் மினி பஸ் நிலைய முன்பாக)

உதயன்

4 – 12 – 1985

NITCO, YEAST, [illegible] பவுடர், [illegible]
பவுடர், ஐசிங் சுகர், GOLDEN SYRUP
சுஜா, பிளம்ஸ் யாவற்றையும்
தட்டுப்பாடின்றி
விற்பனை செய்பவர்கள்
*
ஐடியல் ஏஜென்ஸி
267 B, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
T'Phone: 23648

அரசுடன் பேசுவது குறித்து முடிவில்லை!

டில்லியில் அமிர் தகவல்

புதுடில்லி, டிச.3

இலங்கை அரசுடன் மீண்டும்பேச்சுவார்த்தை நடத்துவது பற்றி இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர்நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு புதுடில்லியில் தெரிவித்தார்.

திரு. அமிர்தலிங்கம் திரு. மு. சிவசிதம்பரம், திரு. இரா. சம்பந்தன் ஆகிய மூவரும் தற்போது புதுடில்லியில் தங்கி இருந்து இந்திய வெளியுறவுச் செயலாளர் திரு. ரொமேஷ் பண்டாரியுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர். திங்கட்கிழமை நடந்த முதலாவது சந்திப்பு 1 மணித்தியாலம் மட்டும் நீடித்தது. செவ்வாய்க்கிழமை மீண்டும் இச்சந்திப்பு நடைபெற இருந்தது.

முதல் நாள் சந்திப்பின் பின்னர் செய்திஸ்தாபனம் ஒன்றுக்குத் திரு. அமிர்தலிங்கம் தகவல் தெரிவிக்கையிலேயே இலங்கை அரசுடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்துவது பற்றி இன்னும் முடிவு செய்யப்படவில்லை என்று கூறினார்.

திரு. பண்டாரியுடனான சந்திப்பின் போது யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழு பயனற்றுவிட்டது என்று திரு.அமிர்தலிங்கம் கூறியதாகத் தெரியவருகிறது.

தமிழர்கள் கொலை செய்யப்படுகிறார்கள் என்றும் யுத்த நிறுத்த ஒப்பந்தம் மீறப்படுவதாகவும் திரு அமிர்தலிங்கம் வெளியுறவுச் செயலாளரின் கவனத்திற்குக் கொண்டுவந்திருந்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்கள் இந்திய வெளிவிவகார கொள்கை வகுக்கும் குழுத்தலைவர் திரு. ஜி. பார்த்தசாரதியையும் சந்தித்தனர்.

திரு. ரொமேஷ் பண்டாரியுடனான பேச்சுவார்த்தையின்போது ஓமானில் ராஜீவ்-லலித் சந்திப்பின் விபரம் பற்றியும் கருத்து பரிமாறப்பட்டது.

ரூபவாஹினி

புதன்கிழமை
4–12–85

மாலை

5–00	செய்தி
5–05	ஜிம்னாஸ்டிக் விளையாட்டு
5–20	ஆங்கில மொழி
5–30	குழந்தைகள் (சிங்களம்)
6–00	"யுவன் சண்டலா"
6–30	செய்திகள் தமிழ்
6–55	கலை அரங்கம்
7–25	பொரி சதய (டெலி நாடகம்)
8–00	செய்திகள் சிங்களம்
8–25	ஜெபர்ஸன்ஸ் நகைச்சுவை தொடர்
9–00	செய்திகள் ஆங்கிலம்
9–20	சங்கீதம்
9–25	'ஸூம் இன்'
9–40	'ஒரு குடும்பம்' ஜப்பானிய திரைப்படம்
11–10	ஒளிபரப்பு முடிவு

வெள்ளம் வடிந்தும் ரயில் நிலைய தொலைபேசி 'வியாதி 'குணமாகவில்லை!

யாழ்ப்பாணம்,டிச.4

யாழ் ரயில்நிலையத்திற்கான தொலைபேசித் தொடர்பு அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தைத் தொடர்ந்து பழுதடைந்தது.

அது இன்னும் திருத்தப்படவில்லை. நிலத்துக்கு அடியில் உள்ள கேபிள்களுக்குள் தண்ணீர் புகுந்ததனால் பாதிக்கப்பட்ட தொலைபேசிகளில் ரயில்நிலையத்தொலைபேசியும் ஒன்று,

இதன் காரணமாகப் பொதுமக்கள் ரயில் நிலையத்துடன் தொடர்புகொள்ளவும், ரயில்நிலைய அதிகாரிகள் கொழும்புடன் தொடர்புகொள்ளவும் முடியாது அவதிப்படுகின்றனர்,

இதனிடையில் வடபகுதி ரயில் நிலையங்களுக்கு இடையேயான தொலைபேசித் தொடர்புகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

இதன் காரணமாக, ரயில் நிலைய அதிகாரிகளினால் சீராக ரயில் சேவையை நடத்த முடியாதுள்ளதாம். இடைவழியில் ரயில்கள் பழுதானாலும் தடம்புரண்டாலும் அதுபற்றிய தகவல்களை உடனடியாகப் பெற்றுத்திருத்த வேலைகளை மேற்கொள்ள முடியாதிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடத்தல் முறியடிப்பு

கொழும்பு, டிச. 4

மலேசியாவிலிருந்து நாலரை லட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு கரன்ஸிகளைக் கடத்திவர முற்பட்ட இலங்கை பிரஜை ஒருவர் நேற்று தடுத்துவைக்கப்பட்டார்.

கட்டுநாயக்கா விமான நிலைய பாதுகாப்பு உத்தியோகத்தர்களே இந்த கடத்தலை முறியடித்தனர்.

இன்று

வட்டுக்கோட்டை, டிச.4

முறைசாராக் கல்வித் திட்ட தையல் பயிற்சி வகுப்பில் பயிற்சி பெற்ற மாணவிகளது தையல் கண்காட்சி வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் இன்று புதன்கிழமை காலை10.30 மணியளவில் திறந்துவைக்கப்படும்.

யாழ் பிரதேச கல்விப் பணிப்பாளர் திரு.ம.சிவயாம்பிள்ளை இதனைத் திறந்துவைப்பார்.

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி கொத்தணிப் பாடசாலை அதிபர் திரு. நா வேலுப்பிள்ளையின் தலைமையில் வைபவம்நடைபெறும்.

விளையாட்டரங்கு

மூன்றுவது டெஸ்ட்

வெற்றிப் பாதையில் நியூஸிலாந்து அணி

பேர்த். டிச. 3

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான மூன்றுவது கிரிக்கெட் டெஸ்ட் ஆட்டத்தில் நியூஸிலாந்து அணி வெற்றிப் பாதையில் முன்னேறி வருகிறது.

நேற்று நான்காம் நாள் ஆட்டம் ஆரம்பமானபோது ஆஸி அணி இரண்டாவது இன்னிங்ஸ் துடுப்பாட்டத்தை தொடர்ந்தது.

ஓரளவு ஓட்டங்களை ஆஸி அணி நேற்று சேகரித்த போதிலும் நியூஸிலாந்து அணியைத் திணறடிக்கக் கூடிய அளவுக்கு உச்சத் தொகை ஓட்டங்களை அதனால் பெற முடியவில்லை.

நேற்றைய ஆட்ட இறுதியின்போது ஆஸி 7 விக்கெட் இழப்புக்கு 239 ஓட்டங்களைப் பெற்றது.

தற்போது ஆஸி அணி நியூஸிலாந்து அணியின் முதல் இன்னிங்ஸ் ஓட்ட எண்ணிக்கையிலும் பார்க்க 143 ஓட்டங்கள் மட்டுமே அதிகம் பெற்றிருக்கிறது. அதன் வசம் மூன்று விக்கெட்டுகள் இன்னும் இருக்கின்றன.

இரண்டாவது இன்னிங்ஸில் ஆஸி அணி தரப்பில் டேவிட் பூன் 50, அணித்தலைவர் அலன் போர்டர் 83, கிரெக்ரிச்சி 44 ஓட்டங்கள் பெற்றனர்.

சிறப்பு பந்து விச்சாளர் ரிச்சர்ட் ஹட்லி சிறப்பாக பந்து வீசி 77 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

அவர் மேலும் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினால் டெஸ்ட் ஆட்டங்களில் 300 விக்கெட்டுக்களை வீழ்த்திய சாதனையை எட்டிப்பிடிப்பார் என்பது குறிப்பிடத்தக்கது.

இன்று ஆட்டத்தின் இறுதி நாளாகும்.

பொற்பதி முன்னணியில்

யாழ்ப்பாணம், டிச. 4

யாழ். உதைபந்தாட்ட லீக்' நடாத்தும் 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் கொக்குவில் பொற்பதி விளையாட்டுக் கழகம் கூடுதல் புள்ளிகளைப் பெற்று முன்னணியில் திகழ்கிறது.

இச்சுற்றுப் போட்டியில் இன்று கொக்குவில் பொற்பதி விளையாட்டுக் கழகமும் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகமும் நேரடி மோதலில் இறங்குகின்றன.

இந்த சுற்றுப் போட்டி அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

ஹாக்கி சுற்றுப் போட்டி

இந்தியா சாம்பியனானது

பாகிஸ்தான், மலேசியா அணிகளை தோற்கடித்தது

ஈப்போ, டிச. 3

மலேசியாவில் நடைபெற்ற சுல்தான் அஸ்லம் ஷா ஹாக்கி சர்வதேச சுற்றுப்போட்டியில் இந்தியாசாம்பியனானது.

நேற்று ஈப்போவில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் இந்தியா மலேசியாவை 4 – 2 என்ற கோல் கணக்கில் தோற்கடித்தது.

பாகிஸ்தான் 2 – 1 என்ற கோல் கணக்கில் ஸ்பெயினைத் தோற்கடித்து மூன்றாம் இடத்தை பெற்றுக்கொண்டது.

நேற்று முன்தினம் நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா பாகிஸ்தானை 1–0 என்ற கோல் கணக்கில் தோற்கடித்தது என்பது குறிப்பிடத்தக்கது.

விசேஷ அடையாளக் கார்ட் வழங்கப்படும் பிரதேசங்கள்

விரைவில் முடிவு செய்யப்படும்

யாழ்ப்பாணம், டிச. 4

விசேஷ அடையாளக் கார்ட் வழங்கப்படும் பிரதேசங்கள் எவை?

விரைவில் இது சம்பந்தமான விவரங்கள் அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன் பின்னர் அந்த இடங்களில் வசிப்பவர்கள் அரசாங்க அதிபரிடமிருந்து புகைப்படத்துடன் கூடிய விசேஷ அடையாள கார்ட்டைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அல்லது அதற்கான அதிகாரம் அளிக்கப்பட்ட அதிகாரியிடம் இருந்து விசேஷ அடையாள கார்ட்டை பெற்றுக் கொள்ள வேண்டும்.

விசேஷ அடையாள கார்ட்டில் பெயர், விலாசம், கையெழுத்து, பெருவிரல் அடையாளம், புகைப்படம் ஆகியன இருக்கும்.

இந்த அடையாளக் கார்ட்டை வைத்திருக்காதவர்கள், குறிப்பிடப்பட்ட பிரதேசங்களில் நடமாட அனுமதிக்கப்படமாட்டார்கள்.

அந்தந்த இடங்களில் உள்ள பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரியின் எழுத்து மூலமான அனுமதியைப் பெற்றவர்கள் மட்டுமே குறிப்பிட்ட பிரதேசத்தினுள் நுழைய அனுமதிக்கப்படுவர்.

புதியவர்கள், குறிப்பிடப்பட்ட பிரதேசங்களில் நடமாடுவதைக் கட்டுப்படுத்துவதற்காக இந்நிபந்தனை விதிக்கப்படுகின்றது.

இந்த விதிகளுக்கு முரணாக நடப்பது, சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படவேண்டிய ஒரு குற்றமாகக்கருதப்படும்.

ஆறுமுக நாவலர் குருபூசை இன்று

அகதி முகாம்களில் அன்னதானம்

யாழ்ப்பாணம் டிச. 4

ஐந்தாம் குரவர் என்று மதிக்கப்படும் ஆறுமுக நாவலர் பெருமானின் 107 ஆவது குருபூசை இன்று கொண்டாடப்படுகின்றது. அன்னாரின் குருபூசை நிகழ்ச்சிகள் தமிழ் அகதிகள் முகாம்களிலும் நடத்தப்பட உள்ளன.

அன்றைய தினம் முகாம்களில் தங்கியுள்ளோருக்கு அன்னதான நிகழ்ச்சிகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

இதனையொட்டி ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்சபை யாழ்நகரில் பல நிகழ்ச்சிகளை ஒழுங்குசெய்து உள்ளது.

அவையாவன:

காலை 5.30 ஆலயங்களில் விசேஷ பூஜை
8.30 நாவலர் அஞ்சலி
9.30 நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் பெரியபுராணபடனம்
10.30 பூஜை, தீபாராதனை, பிரசாதம் வழங்கல்.
11.15 சிறப்புச் சொற்பொழிவும் மகேஸ்வர பூஜையும்.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில்

தொடக்க உரை: திரு. ம. சிவராசா (இயக்குநர் யாழ். குளோபல் கொம்யூனிகேஷன்ஸ்)
ஆசியுரை: ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள்.
சிறப்புரை: 'அருள்மொழி அரசி' திருமதி வசந்தா வைத்தியநாதன்

நல்லூர் திவ்வியஜீவன சங்க மண்டபத்தில்
(சங்கிலியன் புனர்வாழ்வு முகாமில் உள்ளோர்க்கு)

தொடக்கவுரை: திரு. கா. விசுவலிங்கம் (தலைவர், அகதிகள் புனர்வாழ்வுக் கழகம்)
சிறப்புரை: திரு. க. நாகேஸ்வரன்

திருநெல்வேலி சைவ மாணவர் அனாதை இல்லத்தில்

தொடக்க உரை: திரு. கு. கணநாதலிங்கம் (உதவி சங்க சேகரிப்பாளர்)
சிறப்புரை: திரு. க. சிவராமலிங்கம்

தமிழ் மகளிர்அவை புனர்வாழ்வு முகாமில்

தொடக்க உரை: திரு. எஸ். கனகரத்னம் ஜேபியு எம் தலைவர்,வடபகுதிஇ.போ.ச.
சிறப்புரை: திரு. இ. ஜெயராஜ் (அமைப்பாளர், கம்பன் கழகம்)

மாலை 5.30 மணி நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகள்.

தொடக்க உரை: திரு. சி. வி. கே. சிவஞானம், (மாநகர ஆணையாளர்)
வரவேற்புரை: திரு. கா. விசுவலிங்கம்
தலைமையுரை: திரு. இ. சிவகுருநாதன் (பிரதம ஆசிரியர், தினகரன்)

நாவலர் கவிதாஞ்சலி;

பங்கு கொள்ளும் கவிஞர்கள்

1. "சொக்கன்"
2. திரு. சோ. பத்மநாதன்
3. கல்வயல் குமாரசாமி

"வள்ளி திருமணம்" என்ற வில்லுப்பாட்டு நிகழ்ச்சியை கலைமணி எஸ். வடிவேலு நடத்துவார்.

நாவலரின்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

நாவலர் பத்தியுடன் பின்பற்றினார். பண்ணிசையினை யாழ்ப்பாணத்தில் மேலும் வளர்க்க வேண்டும் என்பதற்காக அவர் தமிழ் நாட்டிலிருந்து ஓதுவார்களை இங்கு வரவழைத்தார்.

நாவலர் செய்த முக்கியமான பணிகளில் ஒன்று திருக்கோயிலில் புராணம் படித்தல். இன்னதை இன்ன இசை மரபிற்கேற்ப படிக்க வேண்டும்; அப்போது தான் அப்படிப்புக் கேட்போர் உள்ளத்தில் அன்பு நெறியை வளர்க்கும் என அவர் பல முறையும் கூறுவாராம். அழகியலை அன்புநெறியை மரபுவழி நின்று வளர்த்தவர் நாவலர்.

கோயிலிற் பரதக்கலை பற்றி நாவலர் கண்டிப்பான கருத்தைக் கொண்டிருந்தார்.

பழைமையில் ஊறிப் போனவர் நாவலர். அதே நேரம் புதுமையையும் அவர் வரவேற்கவும் தயாரக இருந்தார்.

6 இராணுவ...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கண்ணி வெடி ஒன்று வெடித்தது.

ஜீப் சுக்கு நூறாகியது. ஆறு ஆயுதப்படையினர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர்.

படுகாயம் அடைந்த மூன்று படை வீரர்கள் ஆபத்தான நிலையில் அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

இறந்த படையினரின் சடலங்கள் திருமலைக் கடற்படை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்டன.

இறந்த ஆயுதப் படையினரின் பெயர்கள் வருமாறு:

சார்ஜண்ட் எம். ஆர். ஹீன் பண்டா, பி. ஏ. வனசுந்தர, எச்.எம்.பலிபான, இ. எம். எக்கநாயக, பி.இ. சுபரட்ன, பி. ஏ. ஜினதாஸ.

இக்கண்ணி வெடி விபத்தின் பின்னர் ஆயுதப்படையினர் சம்பவம் நடந்த இடத்துக்கு அருகில் உள்ள தமிழ்க் கிராமத்திற்குச் சென்றனர்.

அச்சம்பவம் அந்த வழியால் வந்த மினி வானில் இருந்த 9 தமிழர்களை ஆயுதப்படையினர் கைது செய்து விசாரணைக்காக அழைத்துச் சென்றனர்.

தமிழ்க் கிராமத்தில் இருந்த வீடுகளில் நான்கு எரிக்கப்பட்டன.

இந்தியா நினைத்தால்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

படுகின்றோம். ஆகவே நாம் ஆயுதங்களைப் பெருக்கி வருகின்றோம்.

ஆக்கிரமிப்புக்கு எதிராக நாம் தயாராக இருக்கின்றோம்.

வினா: உண்மையிலேயே ஆக்கிரமிப்புப் பயம் என்பது என்ன?

ஜே. ஆர்: இந்திய அரசாங்கம் பற்றி நான் கருதவில்லை. ராஜீவ் ஆக்கிரமிப்புச் செய்ய மாட்டார் என்று நான் நிச்சயமாக கூறுவேன்.

அப்படி இந்திய அரசாங்கம் செய்ய நினைத்தால் (அப்படிச் செய்யாது என்று நான் நம்பினாலும்) அவர்கள் 24 மணித்தியாலங்களில் இலங்கையைக் கைப்பற்றி என்னையும் கைது செய்யலாம்.

அது நடந்தால், சிங்களவர் மத்தியில் வாழும் தமிழர்கள் முடிக்கப்பட்டு விடுவார்கள்.

வினா: அமெரிக்க ஏழாவது கடற்படையை சேர்ந்த கிட்டி ஹொக் (அணுக்கப்பல்) நவம்பர் இரண்டாவது வாரத்தில் கொழும்பு வந்ததாகச் செய்தி.

ஜே. ஆர்.: நாம் அவர்களை அழைக்கவில்லை. அவர்களாகவே வந்தார்கள். நாம் அவர்களுக்குத் துறைமுக வசதியைச் செய்து கொடுத்தோம்.

வினா: பாதகமான நிலைமையில் தீவின் பொருளாதார வீழ்ச்சி எப்படி?

ஜே. ஆர்.: நான் என்ன செய்ய முடியும் என்று கேட்கின்றேன்.

அவர்கள் நாட்டையே பணயம் வைத்திருக்கின்றார்கள். உலகம் முழுவதும் தமிழருக்கு பலமான ஆதரவு சூழ்நிலை உண்டு.

இப்பொழுது படிப்படியாக பல அரசுகள் எமது நிலையை வரவேற்கத் தொடங்கியுள்ளன.

உண்மை நிலைமையை நாம் அவர்களுக்கு எடுத்துச் சொல்லி உள்ளோம்.

வினா: என்ன பிரதிபலிப்பு வந்தது?

ஜே. ஆர்: மேற்கத்திய அமைப்புடன் நாம் மிகவும் நெருங்கியுள்ளோம்.

அமெரிக்கா,பிரிட்டன், ஆஸ்திரேலியா ஏன் ஜப்பானும் கூட எமது பிரச்சினையை உணர்ந்து எமது எண்ணத்தை ஏற்று உள்ளன.

வர்த்தக நிர்ப்பந்தம் கருதி அந்த நாடுகள்முன்னர் இந்தியாவை ஆதரித்தன.

குண்டுகளையும்விமானங்களையும் விற்பதற்கு 80 கோடி மக்கள் வாழும் நாடு ஒரு நல்ல சந்தை அல்லவா!

இந்தியா வாங்கும் பொழுது எவருமே ஒன்றும் பேசவில்லை. நுளம்பு போன்ற ஒன்றைக்கூட நாம் வாங்கும் போது பெரிய சலசலப்பே ஏற்படுகின்றது.

எமது பிரச்சினை பயங்கரவாதமே தவிர ஈழம் அல்ல. இதனை மேற்கு வல்லரசுகளும் உணர்ந்து விட்டன. நீண்ட காலத்திற்கு முன்னரே "ஈழம்" கைவிடப்பட்டு விட்டது.

வன்செயல்கள் மூலம் நாட்டைக் கைப்பற்ற நடத்தப்படும் பெரிய மார்க்ஸிய— லெனினிச சதியே இது.

இனப்பிரச்சினைத் தீர்வு....

(3ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டிய அவசியம் இல்லை:

நாடாளுமன்ற உறுப்பினர்களாக இல்லாதவிடத்து, அவர்கள் நாடாளுமன்றத்துக்குப் பதில் சொல்லவேண்டியதில்லை.

இருந்தாலும் அவர்கள் ஜனாதிபதிக்குப்பதில் சொல்லவேண்டியவர்கள். காரணம் ஜனாதிபதி நாடாளுமன்றம், மாகாணசபைக்குப் பொறுப்பானவர் என்பதால்.

வெளிநாட்டு உதவிக்கு அரசின் அனுமதி தேவை

11. வரிகள், கட்டணங்கள்விதிக்க மாகாண சபைக்கு உரிமை உண்டு. வேறு வழிகள்மூலம் கடனுப்பெற சபைக்கு உரிமை உண்டு. இப்படி வரும் வருமானத்தை திரட்டப்பட்ட நிதி ஒன்றில் போட்டு வைக்கலாம். அந்த நிதிக்குக் குடியரசுநிதி ஒதுக்கீடு நன்கொடை வழங்கும்.

ஒவ்வொரு மாகாணத்திற்கும் நிதி வளங்களை ஒதுக்குவது, ஜனாதிபதியினால் ஒதுக்கப்பட்ட நிதி ஆணைக்குழுப் பிரதிநிதி ஒருவரின் சிபார்சில் இடம்பெறும்.

வெளிநாட்டிலிருந்து கடன் நன்கொடைகள் பெறுவதற்கு மாகாண சபைகள் இலங்கை அரசிடம் இருந்து அனுமதி பெறவேண்டும்.

எப்படியான வரிகளை மாகாணசபை விதிக்கும் என்பது, நாடாளுமன்றத்தினால் வரையறை செய்யப்படும்.

தேர்தல்

நிர்வாக மாவட்டரீதியில் விகிதாசார முறையில் மாகாண சபைக்கான தேர்தல் நடத்தப்படும்.

மாகாணத்தில் இருக்கும் மாவட்டங்களில் உள்ள சனத்தொகைக்கு ஏற்ப மாகாண சபைக்கான உறுப்பினர்கள் தொகை நிர்ணயிக்கப்படும்.

மாகாணசபை உறுப்பினர் நியமனம்

ஒவ்வொரு மாகாணத்திலும் தெரிவான நாடாளுமன்ற உறுப்பினர்கள்அந்தந்தமாகாண சபையில் பதவிவழி உறுப்பினர்களாக இருப்பர். ஏனைய உறுப்பினர்கள் அந்தந்த மாகாணங்களில் இருந்து தெரிவு செய்யப் பட்டவர்களாக இருப்பர்.

பதவிவழி உறுப்பினர்களின் தொகை, தெரிவு செய்யப்படும் உறுப்பினர்கள் தொகைக்கு அதிகமாக இருக்க அனுமதிக்கப்படமாட்டாது.

மாகாணசபையின் நிர்வாகம் அரச அமைப்புச் சட்டவிதிகள்படி நடைபெறவில்லையென்று ஜனாதிபதி திருப்தியடைந்தால் அந்தமாகாணசபையைக் கலைக்கவோ அல்லது வேறு எந்த நடவடிக்கை எடுக்கவோ அவருக்குப் பூரண உரிமை உண்டு.

சபையைக் கலைக்கும் எந்த உத்தரவும் ஒரு முறைக்கு 6 மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும். ஆனால் ஒரு வருடத்திற்கு மேற்படாது.

இரண்டு மாதங்களுக்குள் நாடாளுமன்றம் அங்கீகாரம் வழங்கினால், இக்கால எல்லைக்குப் பின்னரும் அந்த உத்தரவு செல்லுபடியாகும்.

(நாளை தொடரும்)

நீங்களும் வெளிநாடு
செல்லலாம்!

- மேற்கு ஜேர்மனி
- பிரான்ஸ்
- இத்தாலி

எமது பிரதிநிதி உங்களைப் பாதுகாப்பாக
இங்கிருந்து மாதம் இரு தடவை
அழைத்துச் செல்வார்.

லிப்ருஸ் லிமிட்டெட்

R. G.கட்டடம்,
70, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

60, Sea Beach Road,
PETTAH.
T'Phone: 29148

மற்றும்

சகல விமான டிக்கட்டுகள், பாஸ்போட், பொண்ட், விசா என்பனவற்றிற்கும் எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்.

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: [illegible] உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட், 207 மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம். அச்சகம்: 15,2– ஆம் ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் வெளியீட்டு திகதி: 4-12-1985